செய்தி வெளியீடு எண்: 395 நாள் : 24.07.2013

# பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு குறித்தான பயிலரங்கம்

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும்போது நகர்ப்புர பகுதிகளில் அகலமான சாலைகள் மற்றும் குறுகிய சாலைகள் உள்ளதால், குறுகிய சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை பொதுமக்களுக்கு இடையூறு இன்றி செயல்படுத்துவது அரசுக்கு பெரும் சவாலாக இருந்ததால், பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமுல்படுத்தும் வகையில், நகராட்சி நிர்வாக ஆணையரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம் சார்பில் 2 நாள் பயிலரங்கம் 22.07.2013 மற்றும் 23.07.2013 சென்னை, எம்.ஆர்.சி நகர், லீலா பேலஸில் நடைபெற்றது

இப்பயிலரங்கத்தினை 22.07.2013 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.சந்திரகாந்த காம்பளே, இஆப அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு செயலர் திரு.பனீந்தர ரெட்டி இஆப., அவர்கள் பயிலரங்கத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, திட்டம் மற்றும் செயலாக்கம் துறை, அரசு முதன்மை செயலாளர் திரு. எஸ்.கிருஷ்ணன் இஆப., அவர்கள் பயிலரங்கத்தை துவக்கி வைத்தார்.

இப்பயிலரங்கத்தில் பல்வேறு நாடுகள், பிற மாநிலங்களிலிருந்து சார்ந்த பல நிறுவனங்கள், இந்திய தொழிற்நுட்ப நிலைய பேராசிரியர்கள் மற்றும் இதர தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு அவர்களால் செயல்படுத்தப்பட்ட தொழிட்நுட்பங்களை எடுத்துரைத்தனர். நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த தேவையான வழிமுறைகள் குறித்து கருத்து பரிமாற்றம் செய்யப்பட்டது.

இப்பயிலரங்கத்தில் தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு நிதி மற்றும் சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. அனிதா பிரவீன் இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், இஆப., டாக்டர் பி. .சந்திரமோகன் இஆப.,, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர். சுப்பையன் இஆப., நகராட்சி நிர்வாக இணை ஆணையர் திரு.அஜெய் யாதவ் இஆப., பேரூராட்சிகள் துறை இயக்குநர் திரு.செல்வராஜ், இஆப., பல்வேறு நாடுகள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து முன்னனி நிறுவனங்கள், இந்திய தொழிற்நுட்ப நிலைய பேராசிரியர்கள், இதர தொழில்நுட்ப வல்லுநர்கள், அனைத்து துறை பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**23.07.2013** அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்கள் நிறைவுநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ‘‘**தொலைநோக்குத் திட்டம்–2023 ஆவணத்தில்**’’, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான சுகாதார வசதி கிடைக்கச் செய்வதோடு **திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை இல்லாத சூழலில்,** வாழ்வதை உறுதி செய்து பெருகிவரும் நகர்ப்புர மக்கள் தொகைக்கேற்ப அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு தேவையான கொள்கை முடிவுகள் மற்றும் மேலாண்மை உத்திகளை கையாளுவதே பெரும் சவாலாக உள்ளதால், இதனை கருத்திற் கொண்டு, தமிழ்நாட்டினை இந்திய மாநிலங்களிலேயே ‘‘**முதன்மை மாநிலமாக**’’ திகழச் செய்வதே **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** தொலை நோக்கு பார்வையென தெரிவித்து, பல நகரங்களில், முறையான சுகாதார வசதி இன்மையாலும், பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் சரிவர பராமரிக்கப்படாததாலும், திறந்தவெளியில் மனிதக் கழிவுகளை கழிக்கும் நிலையினை ஒழிக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் படிப்படியாக பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தி** இதன் மூலம் நகர்ப்புர மக்களின் சுகாதாரம் பேணப்படுவதுடன், நிலம் மற்றும் நீர்வளம் மாசுபடுதலும் தடுக்க ஆணையிட்டதை நினைவு கூர்ந்தார்.

**பாதாள சாக்கடை திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வரும்** நவீன தொழில்நுட்ப முறையான குடைவு தொழில் நுட்பம் மூலம் குழாய் பதித்தல், அச்சுவார்த்த மனித நுழைவு அமைப்புகள் மற்றும் பல்வேறு வகையான தொழில்நுட்பத்தினை கொண்டு கழிவுநீரை மறு சுழற்சி மூலம் சுத்திகரித்து பயன்படுத்தும் முறைகளால் திட்டப் பணிகளை உரிய காலத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், அதற்கான நவீன தொழில்நுட்பத்தினை பகிர்ந்து கொள்ளவும், அதனை நகர்ப்புர உள்ளாட்சிகளில் நடைமுறைப்படுத்தவும் 2 நாட்கள் பயிலரங்கம் நகராட்சி நிர்வாகத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டதை வரவேற்று பயிலரங்கத்தினை ஏற்பாடு செய்த நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நிகழ்ச்சியினை நடத்திக்கொடுத்த தமிழ்நாடு குடிநீர் முதலீட்டுக் கழகம், நிகழ்ச்சியில் பங்குபெற்று தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொண்டு அனைத்து நிறுவனங்களும், வல்லுநர்களுக்கும் மற்றும் பங்குபெற்ற அனைத்து துறை பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**